**O.S.No. 115/2015**

**நாள் 29.07.2025**

**பி.வா.சா.2 குருசாமி**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இவ்வழக்கில் தனிப்பட்ட முறையில் சாட்சியம் அளிக்கிறேன். 1ம் பிரதிவாதிக்கு சேர்த்து சாட்சியம் அளிக்கவில்லை. நான் தனிப்பட்ட முறையில் எதிர்வழக்குரை தாக்ல செய்யவில்லை என்றாலும், 1ம் பிரதிவாதியுடன் தான் சேர்ந்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் எதிர்கோரியுடன் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் செங்கல் சூளையில் வேலை செய்து வருகிறேன். நான் பி.வா.சா–ஆ.13 சான்றிட்ட நகலை தான் தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா–ஆ.13 ஆவணத்தின் அசலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா–ஆ.13 அசல் ஆவணங்கள் எனது கைவசம் தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணம் 1ம் பிரதிவாதியிடம் இருந்து கிரையம் பெற்றது தான் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு எவ்வாறு சொத்து பாத்தியம் என்று ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றால் நீதிமன்றத்தில் பிறந்த தீர்ப்புரையின் அடிப்படையில் நான் கிரையம் பெற்றுள்ளேன். அவ்வாறு பி.வா.சா.ஆ.1ல் நீதிமன்ற தீர்ப்புரையின் அடிப்படையில் கிரையம் பெற்றேன் என்பது துலங்குமா என்றால் எனக்கு படிப்பறிவு கிடையாது அதனால் அந்த ஆவணத்தில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பது தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கையில் 1ம் பிரதிவாதிக்கு வாய்மொழியாக கிடைக்கபெற்று அதன் மூலம் கிரையம் பெற்றதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்கோரிக்கையில் என்ன எழுதியுள்ளது என்பது பற்றி எனக்கு தெரியாது. எதிர்கோரிக்கை சொத்து மதிப்பு ரூ.60 ஆயிரம் என கூறி தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ரூ.4500/– நீதிமன்ற முத்திரை கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்கோரிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலாது என்றாலும் அது சட்டப்பிழையானது என்றாலும் சரியல்ல. 2ம் வாதி அய்யப்பனை தெரியாது. அவரை நான் பார்த்து கிடையாது. அவர் கோரிய பரிகாரங்கள் குறித்தும் அது சரியானதா அல்லது தவறானதா என்பது குறித்து தெரியாது. 2ம் வாதி கோரிய பரிகாரம் கொடுக்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரியல்ல.

2ம் வாதியை பற்றி இன்றைய தேதியில் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன் யாரென்று தெரியவில்லை. இந்த வழக்கை 1ம் பிரதிவாதி மனோன்மணி நடத்தி வந்தார். அதன்பிறகு நான் நடத்தி வருகிறேன். மேற்படி 1ம் பிரதிவாதி என்ன கட்சி செய்துள்ளார் என்றால் பொன்னுச்சாமியின் மனைவி என்று கட்சி செய்கிறார். சிவகிரி நீதிமன்ற தீர்ப்புரையில் மனோன்மணிக்கு சொத்து உரிமைப்பட்டது என்று கூறவில்லை என்றால் அந்த சொத்தில் எனக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பொன்னுச்சாமியை திருமணம் முடித்தற்கு ஆவணங்கள் நான் பார்க்கவில்லை. திருமண அழைப்பிதழ், புகைப்படம் போன்றவை நான் பார்க்கவில்லை. பெரியார் முறையில் அவர்களுக்கு திருமணம் நடந்தது. மேற்படி பொன்னுச்சாமியும் 1ம் பிரதிவாதியும் வேறு வேறு சமுதாயத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். மேற்படி பொன்னுச்சாமிக்கு 1ம் வாதியை தான் திருமணம் செய்திருந்தார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. பொன்னுச்சாமிக்கு 1ம் வாதி தான் சட்டப்பூர்வ வாரிசு என்றால் அதுகுறித்து தெரியாது. 1ம் வாதியை பொன்னுச்சாமி விவாகரத்து செய்ததற்கான ஆவணத்தினை நான் பார்க்கவில்லை. பொன்னுச்சாமி 1ம் பிரதிவாதியை காதல்திருமணம் செய்து கொண்டார். எந்த ஆண்டு அவ்வாறு காதல் திருமணம் செய்தார் என்றால் அதுகுறித்து தெரியாது. பொன்னுச்சாமி 1ம் பிரதிவாதியை திருமணம் முடிக்கவில்லை என்றும், அவர் மனைவி கிடையாது என்று பேப்பரில் விளம்பரம் செய்திருந்தார் என்றால் அதுகுறித்து தெரியாது. ஆனால் ஒன்றாக குடும்பம் நடத்தினார். பொன்னுச்சாமிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் தாவா ஏற்பட்டு ஒருவருக்கொருவர் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் அதுகுறித்து தெரியாது. பொன்னுச்சாமி நிறைவேற்றிக்கொடுத்த 2006ல் செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து தெரியுமா என்றால் அதுகுறித்து தெரியாது. 1ம் பிரதிவாதி பெயரில் தீர்வை ரசீது போன்ற ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்க்ல செய்த ஆவணத்திற்கும், நான் கோரியுள்ள எதிர்கோரிக்கையில் தாவா வாய்மொழி மூலமும் நீதிமன்றம் மூலம் தாவா சொத்து கிடைத்தாகவும், ஒன்றுக்கொன்று முரண்பட்டு கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்கோரிக்கையில் அதிகார வரம்பு சமூக வரம்பிற்குட்பட்டது அல்ல என்பதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

18.09.2006 செட்டில்மெண்ட் ஆவணத்தினை செல்லாது என நான் பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு நான் பரிகாரம் கோரததால் வாதி கோரும் பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. வாதியை மோசம் செய்ய வேண்டும் என்ற நோக்கில் இரண்டு பிரதிவாதிகளும் ஒன்றாக எதிர்வழக்குரை தாக்கல் செய்து விட்டு, இருவரும் விருப்பு வெறுப்பிற்கேற்ப சாட்சியம அளிக்கிறோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு எந்த நீதிமன்றமும் எவ்வித உரிமையும் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. பொன்னுச்சாமி ஆசாரியும் 1ம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பொன்னுச்சாமி ஆசாரியின் மனைவி கிடையாது என்றால் சரியல்ல. 1ம் வாதியின் செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி 2ம் வாதி தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. எனவே வழக்கினை அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி இல்லை.